CAREERINDIA

**Code No. 04**

Total No. of Questions : 50 ] [ Total No. of Printed Pages : 4

**June/July, 2009**

# TAMIL

Time : 3 Hours 15 Minutes ] [ Max. Marks : 100

***மாணவர்கள் கவனிக்க :***

i) வினாக்களின் எண்களைச் சரியாக குறிப்பிடவும்.

ii) விடைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

iii) மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

ஒரு வரியளவில் விடை தருக : 10 × 1 = 10

1. வைகையில் தவழ்ந்த பேதை யார் ?
2. அமிழ்தம் எங்கு கிடைக்கும் ?
3. திருக்குறளுக்கு உள்ள வேறு பெயர்கள் இரண்டினைக் கூறுக.
4. இறைவன் எப்படிப்பட்ட மனத்தைக் கரைத்து அமுது அளித்தவர் ?
5. முதன் முதலில் கற்கோயிலை அமைத்தவர் யார் ?
6. புதுமைப் பெண்களின் வாழ்க்கையில் இடம் பெறாதவை யாவை ?
7. முதலாளிகள் எதற்கு வழிவிட மாட்டார்கள் ?
8. அப்துல் கலாமின் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் எத்தனை பேர் ?
9. தும்பாவில் ராக்கெட் ஏவுதளத்தை நிறுவியதற்குக் காரணம் என்ன ?
10. 'இஸ்ரோ' கப்பலின் உண்மையான மாலுமி யார் ?

## பகுதி - II

அ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 4 × 2 = 8

11. திருத்தக்க தேவர் அருகதேவனின் சிறப்புக்களை எவ்வாறு பாடுகின்றார் ?
12. நாய் பெற்ற தெங்கம் பழம் எது ? ஏன்.
13. மாடலன் பற்றிக் குறிப்பு வரைக ?
14. சோழனின் யானை நாணி நின்றமைக்குக் காரணம் என்ன ?
15. 'பூமி தன்னில் யாங்கணும் பிறந்ததில்லை' என்று யார் யாரைப் பாரதியார் குறிப்பிடுகின்றார் ?

[ Turn over

www.careerindia.com

CAREERINDIA



ஆ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

16. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதில் ஒரு நல்ல முறை இல்லாவிடின் என்ன ஆகும் என்பதை விளக்குக.

17. கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்ட செய்திகள் யாவை ?

18. எதுகை வடிவில் அமைந்த விடுகதைகளை விளக்குக.

19. நாட்டுப் புறப் பாடல்களின் சிறப்புக்களை எழுதுக.

இ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

20. A.D.E-யில் அப்துல்கலாமுக்கு கொடுத்த பணி யாது ?

21. சிவராம கிருஷ்ண நாயருக்கு ஏற்பட்ட விபத்து யாது ? அவரது கடமை உணர்வு எவ்வாறு வெளிப்பட்டது ?

22. எஸ்.எல்.வி திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை ?

23. வளைகுடாப் போர் இந்தியப் பொதுமக்களிடையே எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது ?

## பகுதி - III

அ. எவையேனும் **இரண்டிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 2 × 3 = 6

24. 'புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்'

25. 'நின் புண்ணியம் அனைத்தும் உதவுக'

26. '............... உன்னோடு உவந்துரைக்கும்
- விண்ணப்ப முண்டு'

ஆ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

27. 'மெய்க் கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுகள் எல்லாம் வரலாற்று ஆராய்ச்சிக்குச் சிறந்த ஆதாரங்களாய் இருத்தல் உணரற்பாலதாகும்.''

28. ''மனையியலும் கல்வியியலும் ஒன்றே''.

www.careerindia.com

CAREERINDIA



இ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

29. ‘‘நமது சொந்த விமானத்தை நாமே உருவாக்குவோம்’’

30. ‘‘அக்னி அது நெருப்பு இந்தியனின் இதய நெருப்பு, அது ஒரு வெறும் ஏவுகணையன்று இந்திய நாட்டின் எரியும் பெருமை’’

## பகுதி - IV

அ. எவையேனும் **மூன்றிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 3 × 5 = 15

31. தமிழ் மக்கள் வளருகின்ற நிலையை வரந்தருவார் எவ்வாறு வகைப்படுத்தி கூறியுள்ளார் ?

32. பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி கூறியதாக அமைந்த கபிலர் பாடலால் அறியப்படும் செய்தியை விளக்குக.

33. இனியவை கூறல் குறித்து வள்ளுவர் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்தெழுதுக.

34. நாம் என்னென்ன செய்ய வேண்டும் எனப் பாரதியார் பாடுகின்றார் ?

ஆ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

35. ‘வெள்ளத்தால் அழியாது’ - என்ற பாடல் வழியே கல்வியின் சிறப்பை எங்ஙனம் மறைமலையடிகளார் நிறுவுகின்றார் ?

36. மங்கலப் பொருளான வெற்றிலை, மருந்துப் பொருளாக விளங்குவதையும் விளக்குக.

37. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் ஆகிய இருவரின் நட்பின் உயர்வைப் புலப்படுத்துக.

இ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

38. அப்துல் கலாமுக்குப் பேராசிரியர் சீனிவாசனின் பாராட்டு எப்படிக் கிடைத்தது ?

39. எஸ். எல். வி. 3-ன் தோல்விக்கு அப்துல் கலாம் பொறுப்பேற்றுக் கொண்டதை விளக்குக.

40. மதுரைப் பட்டமளிப்பு விழாவில் அப்துல் கலாமுக்கும் அவர்தம் பழைய ஆசிரியர் அப்பாதுரை சாலமோனுக்கும் நடந்த உரையாடலை வரைக.

[ Turn over

www.careerindia.com

CAREERINDIA



## பகுதி - V

அ. கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி, அணியை விளக்குக : 1 × 5 = 5

41. 'இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்'

ஆ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 4 × 2 = 8

42. எதிர்ச்சொல் தருக :
i) முதுமை ii) ஒற்றுமை

43. வாக்கியத்தில் அமைக்க :
i) வியர்வைத் துளிகள் ii) புதுநூல்கள்

44. சேர்த்தெழுதுக :
i) கருங்கல் + சுவர் ii) பின் + பகுதி

45. இருபொருள் தருக :
i) படி ii) நூல்

46. கொச்சை சொற்களைத் திருத்தி எழுதுக :
i) போகல்லே
ii) தின்னுப்பார்த்தேன்.

## பகுதி - VI

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

47. நீவிர் விரும்பும் ஒரு தலைவர்

48. அரசியலில் பெண்களின் பங்கு

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை தருக : 1 × 5 = 5

49. நீர் சென்று வந்த சுற்றுலா பற்றி உனது நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

50. 'தாயைப் போல பிள்ளை
நூலைப் போல சேலை' - என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைக்கவும்.

www.careerindia.com